**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

CC.73/2021

Prosecution witness.6

| | |
|---|---|
| பெயர் : திரு. சக்திவேல் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of January 2025.

29.01.2025

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது முதுகுளத்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 17.02.2020 ம் தேதி அன்று முதுகுளத்தூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் முதற்கட்ட விசாரணை செய்து எனது பார்வைக்கு வைத்து முதுகுளத்தூர் குற்ற எண்.38/2020 வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2) மேலும் பட்டியல் சாட்சிகள் அனைவரும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் அவர்களிடம் கூறிய சங்கதிகளை என்னிடமும் கூறியதால் மறு வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

3) பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து இதச பிரிவுகள் 447, 294(b), 354, Sec 4 of TNPHW Actன் கீழ் 28.03.2020 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**1)** வழக்கு சாட்சிகளை விசாரித்துதான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவ தேதி 14.02.2020 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தேதி 16.02.2020 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 3(A) காலத்தில் குற்ற நிகழ்வு நாள் 14.02.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 3(b) காலத்தில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.02.2020 என்றால் சரிதான்.

2) சாட்சிகளை மறு விசாரணை செய்ததை குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் ஆவணங்களின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் அ.சா.1 க்கும் பணம் கொடுங்கல் வாங்கல் இந்த விவரத்தை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சம்பவ நாளன்று எதிரிகளை அடித்தது சம்பந்தமாக அ.சா.1 மற்றும் அவரது உறவினர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நினைவில் இல்லை.

3) அ.சா.1 க்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை காரணமாக அ,சா.1 யிடம் கொடுத்த பணத்தை கேட்டதற்கு பணம் தர மறுத்ததால் எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.73/2021
Prosecution witness.5

| | |
|---|---|
| பெயர் : ராஜேந்திரன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of January 2025.

29.01.2025

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது தமிழ்நாடு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். கடந்த 14.02.2020 ம் தேதி தேரிருவேலி சிறப்பு சார்பு ஆய்வாளராக பொறுப்பு முதுகுளத்தூர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராக ஆக நான் நிலையப் பொறுப்பில் இருந்தபோது வீரம்பல் கிராமம், இருப்பு முதுகுளத்தூர் சாகீர் உசேன் தெருவில் குடியிருக்கும் பிரேமலா க.பெ.டேவிட்பால் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பெற்று புகார் மனுவுக்கு ரசீது அளித்தேன்.

**2)** புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப 16.02.2020 ம் தேதி நிலைய குற்ற எண்.38/2020 இதச பிரிவுகள் 447, 294(b), 354, & 4 of TNPHW Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3)**

**3)** பின்பு 16.02.2020 தினமே 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட

சாட்சிகளான சச்சின் மற்றும் காளிராஜா ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4.)**

**4)** அன்றைய தினமே பட்டியல் சாட்சிகள், பிரேமலதா ,டேவிட்பால், பிரசிலா, லட்சுமி, சச்சின் மற்றும் காளிராஜா ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி முன்பிணையில் சென்றதால் எதிரியை கைது செய்யவில்லை. பின்பு மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**1.** சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 14.02.2020 தேதி மதியம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட தேதி 16.02.2020 என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 3(A) காலத்தில் சம்பவ நேரம் 16.02.2020 ம் தேதி 13.00 மணி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 3(b) காலத்தில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.02.2020 ம் தேதி 14.00 மணி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 ம் எதிரியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

2. அ.சா.1 க்கும் எதிரிக்கும் கொடுங்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்பது எனக்கு தெரியுமா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஜாகீர் உசேன் 2 வது தெரு என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் அ.சா.1 ன் கணவர் டேவிட்பால் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி யார் அ.சா.2 டேவிட்பாலுக்கு யார் தகவல் அளித்தார் என்றால் அவரது மனைவியான அ.சா.1 தகவல் அளித்துள்ளார்.

3. சம்பவ நாள் சம்பவ தேயில் எதிரியை அ.சா.1 மற்றும் அவரது உறவினர்கள் அடித்தது சம்பந்தமாக நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மூலம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு விவரம்

தெரியவில்லை. எதிரி கொடுத்த புகார் மனு மீது அ.சா.1 உறவினர்கள் சமரச பேச்சுவார்தை நடத்தி பேச்சு வார்த்தை உடன்பாடாத காரணத்தினால் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை முறையாக விசாரணை செய்யாமல் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. வழக்கு சம்பந்தமாக விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார் எந்த தேதி என்று ஞாபகம் இல்லை. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி அ.சா.1 க்கு கொடுத்த பணத்தை கேட்டதற்கு பணம் தர மறுத்ததால் எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.